**EVERWIN VIDHYASHRAM**

**STD: III** **L2- தமிழ்** **Term - II**

**இலக்கணம் - II**

**அக்டோபர்**

**திணை**

1. திணை என்னும் சொல்லின் பொருள் யாது?
   திணை என்னும் சொல்லின் பொருள் ஒழுக்கம் ஆகும்.
2. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   திணை இரண்டு வகைப்படும். அவை:
   → உயர்திணை
   → அஃறிணை

**நவம்பர்**

**எண்**

1. எண் என்றால் என்ன?
   எண் என்றால் எண்ணிக்கையைக் குறிக்கும்.
2. எண் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   எண் இரண்டு வகைப்படும். அவை:
   → ஒருமை
   → பன்மை
3. ஒருமை என்றால் என்ன? எ.கா தருக.
   ஒன்றை மட்டும் குறிப்பது ஒருமை எனப்படும்.
   எ.கா: ஆடு, மரம்
4. பன்மை என்றால் என்ன? எ.கா தருக.
   ஒன்றிற்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை எனப்படும்.
   எ.கா: ஆடுகள், மரங்கள்

**டிசம்பர்:**

**பால்**

1. பால் என்பதன் பொருள் யாது?
   பால் என்பதன் பொருள் பகுப்பு ஆகும்.
2. பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   பால் ஐந்து வகைப்படும். அவை:
   - ஆண்பால்
   - பெண்பால்
   - பலர்பால்
   - ஒன்றன் பால்
   - பலவின் பால்

**ஜனவரி:**

**அடுக்குத்தொடர்**

1. அடுக்குத்தொடர் என்றால் என்ன?
   ஒரு சொல் இருமுறை வந்து பொருள் தருவது அடுக்குத்தொடர் எனப்படும்.
2. அடுக்குத்தொடருக்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக:
   - வாழ்க! வாழ்க!
   - வருக! வருக!

**பிப்ரவரி**

**நிறுத்தற்குறிகள்**

1. உன் பெயர் என்ன?
2. ஆஹா! அருமையான புகைப்படம்.
3. நான் மூன்றாம் வகுப்பில் படிக்கிறேன்.
4. வாழை மரத்தின் பூ, இலை, கனி, காய் அனைத்தும் நமக்குப் பயன்படும்.
5. "காலம் பொன் போன்றது" என்பது பழமொழி.

## Term - II

**கட்டுரை - வாழைமரம்**

- மரங்களில் சிறந்தது வாழைமரம்.
- வாழை இலையில் உணவு உண்பது உடலுக்கு நல்லது.
- வாழைமரத்தின் பூ, காய், தண்டு ஆகியவை சமையலுக்குப் பயன்படும்.
- வாழை மரத்தின் அனைத்துப் பாகங்களும் மருத்துவக்குணம் உடையது.
- நம் முன்னோர்கள் "வாழையடி வாழையாக" என வாழ்த்துவர்.

**கடிதம்**

பிறந்தநாள் விழாவிற்கு வருமாறு நண்பனுக்கு அழைப்புக் கடிதம் வரைக.

தேதி ...............
சென்னை.

அன்புள்ள ரவிக்கு,

நலம். நலமறிய ஆவல். என்னுடைய பிறந்த நாள் அடுத்த மாதம் வர இருக்கிறது. நீ என் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள வேண்டும். ஆகையால் உன் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புத்தோழன்/தோழி,
.......................

உறைமேல் முகவரி:

ரவி,

15, பாரதிசாலை,

சேலம்.